அரசுத் தேர்வுகள் இயக்குநர் அலுவலகம்
18 ஆக 2017
சென்னை-600 006

102697

## சுருக்கம்

பள்ளிக் கல்வி – 11–ஆம் வகுப்பு பொதுத் தேர்விற்கான மதிப்பீட்டு முறை வடிவமைப்பு மற்றும் நெறி முறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (ஜிஇ1) துறை**

அரசாணை (2டி) எண். 50

நாள் : 09. 08.2017.
திருவள்ளுவர் ஆண்டு 2048
ஹேவிளம்பி வருடம், ஆடி –24

படிக்கப்பட்டவை :-

1. அரசாணை நிலை எண்.99, பள்ளிக் கல்வித் (கஆ்ப) துறை, நாள் 22.05.2017.
2. அரசாணை நிலை எண்.100, பள்ளிக் கல்வித் (அ.தே.1) துறை, நாள் 22.05.2017.
3. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் கடிதம் ந.க.எண். 2592/டி2/2017 நாள் 27.06.2017.)

-----

ஆணை :-

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், பள்ளிக் கல்விப் பாடத்திட்டத்தை மாற்றியமைத்திட ஆணை வெளியிடப்பட்டது.

2. இதனையடுத்து மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2017–18–ஆம் ஆண்டிலிருந்து, மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் மாநில அளவில் அரசு பொதுத் தேர்வுகள் நடத்திட ஆணை வெளியிடப்பட்டது.

3. இதனைத் தொடர்ந்து, மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களின் கடிதத்தில், மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு தொடர்பாக, வினாத்தாள் வடிவமைப்பு மற்றும் மதிப்பீட்டு நெறிமுறை வகுப்பதற்கென, 01.06.2017 அன்று, இயக்குநர், இணை இயக்குநர்களை உள்ளடக்கிய கூட்டம் நடத்தப்பட்டது என்றும், பின்னர் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் அவர்களின் தலைமையில் "மாநில அளவிலான வழிகாட்டும் குழு" ஒன்று அமைக்கப்பட்டது என்றும், இக்குழுவின் கூட்டத்தில் மதிப்பீட்டு நெறிமுறைகளை உருவாக்குதல் மற்றும் மாதிரி வினாத்தாள் வடிவமைப்பதற்கென துணைக்குழு ஒன்று, முன்னாள் அரசு தேர்வுத் துறை இயக்குநர் முனைவர் கு.தேவராஜன் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டதையடுத்து, துணைக்குழுவானது கல்வியாளர்கள், பாட ஆசிரியர்கள், கல்வி அலுவலர்கள் ஆகியோருடன் பல்வேறு நிலைகளில் வினாத்தாள் வடிவமைப்பு மற்றும் மதிப்பீட்டுமுறை குறித்து ஆலோசனை செய்தது. மேலும், துணைக்குழு 19.06.2017 அன்று மாநில வழிகாட்டும் குழுவுடன் கூடி, வினாத்தாள் வடிவமைப்பு மற்றும் மதிப்பீட்டுமுறை குறித்து விவாதித்து அதனடிப்படையில் தனது பரிந்துரையினை அளித்தது என்றும், அதனைத் தொடர்ந்து பள்ளிக் கல்வி இயக்குநர், மெட்ரிக்குலேஷன் பள்ளிகளின் இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் அரசுத் தேர்வுகள் இயக்குநர் ஆகியோர் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் உரிய கருத்துருவினை அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

4. மேற்காணும் சூழ்நிலையில், 11–ஆம் வகுப்பிற்கு, மாநில அளவில் பொதுத் தேர்வு நடத்துவது குறித்து, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கருத்துரு அரசால் கவனமாக பரிசீலனைச் செய்யப்பட்டு, அதனை ஏற்று, 11–ம் வகுப்பிற்கு மாநில அளவில் பொதுத் தேர்வு நடத்துவதற்கான மதிப்பீட்டு முறை, வினாத்தாள் வடிவமைப்பு மற்றும் பின்பற்றப்படவேண்டிய நெறிமுறைகளை பின்வருமாறு நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகிறது:–

**I. மொழிப்பாடங்கள்**

தேர்ச்சி பெறுவதற்கு மொழிப்பாடங்களில் தாள் I மற்றும் தாள் II ஆகிய இரு தேர்வுகளையும் எழுதுவது கட்டாயமாகும். மேலும் இரு தாள்களிலும் சேர்த்து எழுத்துத் தேர்வில் சராசரியாக கணக்கிடப்படும் 100 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்சம் 35 மதிப்பெண்கள் பெற்றிருப்பதுடன், இருத்தாள்களும் சேர்த்து எழுத்துத் தேர்வின் சராசரி மதிப்பெண்ணான 90 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்சம் 25 மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

**II. செய்முறைத் தேர்வு உள்ள பாடங்கள்**

தேர்ச்சி பெறுவதற்கு எழுத்துத் தேர்வில் 70 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்சம் 15 மதிப்பெண்கள் பெற வேண்டும். மேலும் செய்முறை வகுப்புகளில் பங்கேற்று செய்முறைத் பொதுத் தேர்வு எழுதி இருக்க வேண்டும். எழுத்துத் தேர்வு, அக மதிப்பீடு மற்றும் செய்முறைத் தேர்வு ஆகியவற்றில் ஒட்டு மொத்தமாக குறைந்தபட்சம் 35 மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

**III. செய்முறைத் தேர்வு இல்லாத பொதுப்பாடங்கள் மற்றும் தொழிற்கல்வி எழுத்துத்தேர்வு பாடங்கள்**

தேர்ச்சி பெறுவதற்கு எழுத்துத் தேர்வில் 90 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்சம் 25 மதிப்பெண்கள் பெற்றிருப்பதுடன், அக மதிப்பீடு மற்றும் எழுத்து தேர்வு ஆகியவற்றில் ஒட்டு மொத்தமாக குறைந்தபட்சம் 35 மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

**IV. தொழிற்கல்வி செய்முறை பாடங்கள்**

தேர்ச்சி பெறுவதற்கு தொழிற்கல்வி செய்முறை புறத் தேர்வில் 75 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்சம் 20 மதிப்பெண்கள் பெற்றிருப்பதுடன், அகமதிப்பீடு மற்றும் செய்முறைத் தேர்வு ஆகியவற்றில் ஒட்டு மொத்தமாக குறைந்தபட்சம் 35 மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்

| பொருள் | செய்முறை தேர்வு உள்ள பாடங்கள் | மொழிப்பாடங்கள் மற்றும் செய்முறைத் தேர்வு இல்லாத பாடங்கள் | தொழிற்கல்வி பாடம் | |
|---|---|---|---|---|
| | | | கருத்தியல் | செய்முறை |
| மொத்த மதிப்பெண்களில் பெற வேண்டிய மதிப்பெண்கள் | 100க்கு 35 மதிப்பெண்கள் | 100க்கு 35 மதிப்பெண்கள் | 100க்கு 35 மதிப்பெண்கள் | 100க்கு 35 மதிப்பெண்கள் |
| எழுத்துத் தேர்வில் பெற வேண்டிய மதிப்பெண் | 70க்கு 15 மதிப்பெண்கள் | 90க்கு 25 மதிப்பெண்கள் | 90க்கு 25 மதிப்பெண்கள் | செய்முறை புறத் தேர்வில் 75க்கு 20 மதிப்பெண்கள் |

(த.பி.பா)

V. அக மதிப்பீடு

அரசாணை (நிலை) எண். 100, பள்ளிக் கல்வி (அ,தே.1)த் துறை நாள் 22.05.2017ன்படி, அனைத்துப் பாடங்களிலும் மாணவர்களின் தொடர் கற்றலை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு பாடத்திலும் 10 மதிப்பெண்கள் அக மதிப்பீடாக அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தொழிற்கல்வி பாடங்களில் செய்முறைத் தேர்விற்கு 25 மதிப்பெண்கள் அக மதிப்பீட்டு மதிப்பெண்களாக வழங்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியான கற்றலுக்கு மாணவர்களின் வருகைப்பதிவு முக்கியமானதாகும். மேலும் தொடர்ந்து மதிப்பிடும் போது மாணவர்களின் கற்றல் அடைவு அறியப்பட்டு, மாணவர்களின் முழுமையான கற்றல் அடைவினை உறுதிப்படுத்த இயலும். இதனடிப்படையில் பின்வருமாறு அக மதிப்பீட்டிற்கு மதிப்பெண்கள் வழங்கலாம்.

A. <u>அக மதிப்பீட்டிற்கான மதிப்பெண் ஒதுக்கீடு (தொழிற்கல்வி செய்முறை தவிர்த்து)</u>

i. மாணவர்கள் வருகைப் பதிவு : **அதிகபட்சம் 3 மதிப்பெண்கள்**

- a) 85 சதவீதத்திற்கு மேல் வருகை :3 மதிப்பெண்கள்
- b) 80 சதவீதத்திற்கு மேல் முதல் 85 சதவீதம் வரை : 2 மதிப்பெண்கள்
- c) 75 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை : 1 மதிப்பெண்

ii. உள்நிலைத் தேர்வுகள் : **அதிகபட்சம் 5 மதிப்பெண்கள்**

சிறந்த ஏதேனும் மூன்று தேர்வுகளின் சராசரி மதிப்பெண்ணை 5 மதிப்பெண்களுக்குக் கணக்கிடப்பட்டு வழங்கப்பட வேண்டும்.

iii. ஒப்படைவு/செயல்திட்டம்/களப்பயணம் : **அதிகபட்சம் 2 மதிப்பெண்கள்**

(மூன்றில் ஏதேனும் ஒன்று – உரிய பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும்)

மொத்தம் : 10 மதிப்பெண்கள்

**B. தொழிற்கல்வி செய்முறை பாடத்திற்கான அக மதிப்பீடு (அதிகபட்சம் 25 மதிப்பெண்கள்)**

**i.** மாணவர்கள் வருகைப் பதிவு : **அதிகபட்சம் 5 மதிப்பெண்கள்**

- a) 85 சதவீதத்திற்கு மேல் வருகை :5 மதிப்பெண்கள்
- b) 80 சதவீதத்திற்கு மேல் முதல் 85 சதவீதம் வரை : 4 மதிப்பெண்கள்
- c) 75 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை : 2 மதிப்பெண்

**ii.** **உள்நிலைத் தேர்வுகள் : அதிகபட்சம் 15 மதிப்பெண்கள்**
சிறந்த ஏதேனும் மூன்று தேர்வுகளின் சராசரி மதிப்பெண்–15 மதிப்பெண்களுக்குக் கணக்கிடப்பட்டு வழங்கப்பட வேண்டும்.

**iii.** ஒப்படைவு / செயல்திட்டம் / களப்பயணம் : அதிகபட்சம் 5 மதிப்பெண்கள்
(மூன்றில் ஏதேனும் ஒன்று – உரிய பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும்)

மொத்தம் : 25 மதிப்பெண்கள்

(த.பி.பா)

C. செய்முறை புறத் தேர்வு (External Examination) மதிப்பெண் ஒதுக்கீடு

அரசாணை (நிலை) எண். 100, பள்ளிக் கல்வி (அ,தே.1)த் துறை நாள் 22.05.2017ன்படி செய்முறைத் தேர்விற்கு 20 மதிப்பெண்களும், தொழிற்கல்வி பாடங்களில் செய்முறை தேர்விற்கு 75 மதிப்பெண்களும் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாரமும் உரிய செய்முறை பாடத்திற்குரிய பிரிவுவேளையில் செய்முறைப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டு ஒவ்வொரு மாதமும் பயிற்சி மேற்கொள்ளப்பட்டமை முறையாகக் கண்காணிக்கப்பட வேண்டும். செய்முறைப் பாடவேளையில் மாணவர்கள் கருவிகளைக் கையாளுதல், விவரித்தல், பதிவு செய்தல் உள்ளிட்ட திறன்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். தேர்ச்சி பெறுவதற்கு செய்முறைப் புறத் தேர்வில் கட்டாயமாக பங்கேற்றிருக்க வேண்டும். மதிப்பெண் ஒதுக்கீடு பின்வருமாறு வழங்கப்பட வேண்டும்.

i. **செய்முறை புறத் தேர்விற்கான** (External Examination) **மதிப்பெண் ஒதுக்கீடு (தொழிற்கல்வி செய்முறை தவிர்த்து)**

| | |
|---|---|
| செய்முறைப் பதிவேடு | 3 மதிப்பெண்கள் |
| திறன் மதிப்பீடு | 2 மதிப்பெண்கள் |
| செய்முறைப் புறத் தேர்வு | 15 மதிப்பெண்கள் |
| மொத்தம் | 20 மதிப்பெண்கள் |

**(ii) தொழிற்கல்விப் பாடச் செய்முறைப் புறத் தேர்விற்கான** (External Examination) **மதிப்பெண் ஒதுக்கீடு**

| | |
|---|---|
| செய்முறைப் பதிவேடு | 20 மதிப்பெண்கள் |
| செய்முறை வகுப்புகளில் பங்கேற்பு, கருவிகளை கையாளுதல் | 5 மதிப்பெண்கள் |
| செய்முறைப் புறத் தேர்வு | 50 மதிப்பெண்கள் |
| மொத்தம் | 75 மதிப்பெண்கள் |

VI. **வினாத்தாள் வடிவமைப்பு**

i. அரசாணை (நிலை) எண். 100, பள்ளிக் கல்வி (அ,தே.1)த் துறை நாள் 22.05.2017ன்படி எழுத்துத் தேர்விற்கு செய்முறைத் தேர்வு உள்ள பாடங்களில் 70 மதிப்பெண்களும், செய்முறைத் தேர்வு இல்லாத பொதுப் பாடங்கள் மற்றும் தொழிற்கல்வி பாடங்களின் எழுத்துத் தேர்விற்கு 90 மதிப்பெண்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் மொழிப் பாடங்களில் எழுத்துத் தேர்விற்கென இரு தாள்களும், ஒவ்வொரு தாளுக்கும் 90 மதிப்பெண்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ii. வினாத்தாள் வடிவமைப்பு (செய்முறைத் தேர்வு இல்லாத பாடங்கள்)

| வினாக்களின் வகை | மதிப்பெண் | விடையளிக்கப் படவேண்டிய வினாக்களின் எண்ணிக்கை | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| ஒரு மதிப்பெண் வினாக்கள் | 1 | 20 | 20 |
| குறு வினாக்கள் (மொத்தம் 10 வினாக்கள் தரப்பட வேண்டும் – ஏதேனும் ஒரு வினா கட்டாயமாக விடையளிக்கும் வகையில் வினாத்தாள் அமைக்கப்பட வேண்டும்) | 2 | 7 | 14 |
| சிறு வினாக்கள் (மொத்தம் 10 வினாக்கள் தரப்பட வேண்டும் – ஏதேனும் ஒரு வினா கட்டாயமாக விடையளிக்கும் வகையில் வினாத்தாள் அமைக்கப்பட வேண்டும்) | 3 | 7 | 21 |
| பெரு வினாக்கள் (உட்பிரிவுகளுடன்) | 5 | 7 | 35 |
| | | மொத்தம் | 90 |

(iii) வினாத்தாள் வடிவமைப்பு (செய்முறைத் தேர்வு உள்ள பாடங்கள்)

| வினாக்களின் வகை | மதிப்பெண் | விடையளிக்கப் படவேண்டிய வினாக்களின் எண்ணிக்கை | மொத்த மதிப் பெண்கள் |
|---|---|---|---|
| ஒரு மதிப்பெண் வினாக்கள் | 1 | 15 | 15 |
| குறு வினாக்கள் (மொத்தம் 9 வினாக்கள் தரப்பட வேண்டும் – ஏதேனும் ஒரு வினா கட்டாயமாக விடையளிக்கும் வகையில் வினாத்தாள் அமைக்கப்பட வேண்டும்) | 2 | 6 | 12 |
| சிறு வினாக்கள் (மொத்தம் 9 வினாக்கள் தரப்பட வேண்டும் – ஏதேனும் ஒரு வினா கட்டாயமாக விடையளிக்கும் வகையில் வினாத்தாள் அமைக்கப்பட வேண்டும்) | 3 | 6 | 18 |
| பெரு வினாக்கள்(உட்பிரிவுகளுடன்) | 5 | 5 | 25 |
| | | மொத்தம் | 70 |

(iv) வினாத்தாள் வடிவமைப்பு (உயிரியல் பாடம்)

| வினாக்களின் வகை | மதிப் பெண் | உயிர்– தாவரவியல் | | உயிர்– விலங்கியல் | |
|---|---|---|---|---|---|
| | | விடையளிக்கப் படவேண்டிய வினாக்களின் எண்ணிக்கை | மொத்த மதிப் பெண்கள் | விடையளிக்கப் படவேண்டிய வினாக்களின் எண்ணிக்கை | மொத்த மதிப் பெண்கள் |
| ஒரு மதிப்பெண் வினாக்கள் | 1 | 8 | 8 | 8 | 8 |
| குறு வினாக்கள் (உயிர் தாவரவியல் மற்றும் உயிர் விலங்கியல் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் 6 வினாக்கள் தரப்பட வேண்டும்) | 2 | 4 | 8 | 4 | 8 |
| சிறு வினாக்கள் உயிர் தாவரவியல் மற்றும் உயிர் விலங்கியல் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் 5 வினாக்கள் தரப்பட வேண்டும் – ஏதேனும் ஒரு வினா கட்டாயமாக விடையளிக்கும் வகையில் வினாத்தாள் அமைக்கப்பட வேண்டும்) | 3 | 3 | 9 | 3 | 9 |
| பெரு வினாக்கள் (உட்பிரிவுகளுடன்) | 5 | 2 | 10 | 2 | 10 |
| மொத்தம் | | | 35 | | 35 |

(V) வினாத்தாள் வடிவமைப்பு (தொழிற்கல்வி)

| வினாக்களின் வகை | மதிப்பெண் | விடையளிக்கப் படவேண்டிய வினாக்களின் எண்ணிக்கை | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| ஒரு மதிப்பெண் வினாக்கள் | 1 | 15 | 15 |
| குறு வினாக்கள் (மொத்தம் 13 வினாக்கள் தரப்பட வேண்டும் – ஏதேனும் ஒரு வினா கட்டாயமாக விடையளிக்கும் வகையில் வினாத்தாள் அமைக்கப்பட வேண்டும்) | 3 | 10 | 30 |
| சிறு வினாக்கள் (மொத்தம் 7 வினாக்கள் தரப்பட வேண்டும் – ஏதேனும் ஒரு வினா கட்டாயமாக விடையளிக்கும் வகையில் வினாத்தாள் அமைக்கப்பட வேண்டும்) | 5 | 5 | 25 |
| பெரு வினாக்கள் (உட்பிரிவுகளுடன்) | 10 | 2 | 20 |
| | | மொத்தம் | 90 |

(த.பி.பா)

VII. கற்றலின் நோக்கங்களுக்கான மதிப்பெண் ஒதுக்கீடு

| வ.எண் | நோக்கம் | மதிப்பெண் விழுக்காடு |
|---|---|---|
| 1 | அறிந்துகொள்ளுதல் | 30% |
| 2 | புரிந்துகொள்ளுதல் | 40% |
| 3 | பயன்படுத்துதல் | 20% |
| 4 | திறனடைதல் / படைப்பாற்றல் | 10% |

ஒரு மதிப்பெண், இரண்டு மதிப்பெண், மூன்று மதிப்பெண், ஐந்து மதிப்பெண் வினாக்கள் என ஒவ்வொரு பிரிவிலும் வினாக்கள் வடிவமைக்கப்படும்போது மேற்கண்டுள்ளவாறு கற்றல் நோக்கங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மதிப்பெண்களின் அடிப்படையில், ஒவ்வொரு பிரிவிலும் வினாக்கள் இடம் பெறும் வகையில் வினாத்தாள் வடிவமைக்கப்பட வேண்டும் என்று அரசுத் தேர்வுகள் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. உதயச்சந்திரன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக்குலேசன் பள்ளிகளின் இயக்குநர், சென்னை–6.
அரசு தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.